# தீமமேகு கரு 2014

## சீடத்துவம்:

## அழைத்தல், தேர்வு செய்தல், அனுப்புதல்

| | மாதம் | மாதாந்திர துணைக் கரு | வாசகம் |
|---|---|---|---|
| அழைத்தல் | ஜனவரி | கடவுள் அழைத்தல் | மத்தேயு 9:9-13 |
| | பெப்பிரவரி | பெயர் சொல்லி அழைத்தல் | மாற்கு 3:13-19 |
| | மார்ச் | அணுக்கமான உறவுக்கு அழைத்தல் | யோவான்10: 14-15, 27-28 |
| | ஏப்ரல் | புதுவாழ்விற்கு அழைத்தல் | யோவான் 3:1-7 |
| தேர்வு செய்தல் | மே | பலரில் தேர்வு செய்யப்படுதல் | யோவான் 1:35-42 |
| | ஜூன் | சக்தியூட்ட தேர்வு செய்யப்படுதல் | யோவான் 14:23-26 |
| | ஜூலை | இறைவார்த்தையைப் பெற தேர்வு செய்யப்படுதல் | மாற்கு 4: 3-10, 14-20 |
| | ஆகஸ்ட்டு | ஆண்டவரை மகிமைப்படுத்த தேர்வு செய்யப்படுதல் | லூக்கா 1:46-55 |
| அனுப்புதல் | செப்டம்பர் | அன்பு செய்ய அனுப்பப்படுதல் | லூக்கா 10:25-37 |
| | அக்டோபர் | கலந்துரையாட அனுப்பப்படுதல் | மத்தேயு 7:21-27 |
| | நவம்பர் | சாட்சியம் பகர அனுப்பப்படுதல் | மத்தேயு 5:13-16 |
| | டிசம்பர் | வார்த்தை மனுஉருவாக அனுப்பப்படுதல் | யோவான் 14: 6-11 |

மூன்றாவது தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு 3 (PMPC 3) உடன் தொடங்கிய பணியைத் தொடரும் பொருட்டு சீடத்துவ கருப்பொருள் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. சீடர்கள் என தொடங்கி அப்போஸ்தலர் என முடிவடைந்த இயேசு தேர்வு செய்தவர்களின் பயணத்தைக் குறிக்கும் வகையில் இந்த கருப்பொருள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இயேசு தேர்வு செய்த 12 அப்போஸ்தலர்களும் தங்களது சொந்த தொழிலில் ஈடுபட்டிருந்த சாதாரண மக்கள். அவர்களிடம் குறைகள் இருந்தாலும், அவர்களின் ஆர்வத்தையும் ஆழத்தையும் அறிந்து அவர்களை அழைத்தார். மேலும், அழைத்தவுடன் இயேசுவின் குரலுக்குச் செவிசாய்த்த அவர்களும் வாழ்க்கையில் உண்மையான அர்த்தத்தைத் தேடிக் கொண்டிருந்தனர் என்பதை சுட்டுகிறது. எனினும், சீடர் எனத் தொடங்கிய பயணம் (கிரேக்கத்தில் mathetes=கற்பவர்/மாணவர்) அப்போஸ்தலர் (கிரேக்கத்தில் apostolos=அனுப்பப்பட்டவர்) என்ற நிலைக்குச் செல்லும் போது மூன்று முக்கிய நிலைகளைக் குறிக்கிறது: கடவுளின் அழைப்பு, பலரில் தேர்வு செய்யப்பட்டது, அறிவிக்க அனுப்பப்படுவது.

இதற்குப் பின்பு ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும், இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார் – என்ற லூக்கா 10:1 வாசகம் 2014ம் ஆண்டுக்கான பொதுவான விவிலிய வாசகமாக அமையும்.

நமது விசுவாசம், மற்றவர்களின் உள்ளத்தைத் தொடும் வகையில் முன்னோக்கி செல்ல வேண்டும் என்பதை நமது சமூகங்கள் புரிந்து கொள்ள செய்வதற்கு இவ்வாண்டு நோக்கம் உதவும். "மேய்ப்புப்பணியில் மற்றவர்களைத் தொடுவது, விசுவாசச் சமூகத்தின் முதிர்ச்சியை உணர்த்தும் அறிகுறி" (16ம் பெனடிக், கடவுளின் வார்த்தை (Verbum Domini, 95). விசுவாசத்தை அறிக்கையிட்டு, மகிழ்ச்சியில் திருவழிபாட்டைக் கொண்டாடி, தர்மம் செய்து, திருவார்த்தையை இடைவிடாது உச்சரித்து, இன்னும் கிறிஸ்துவை அறியாத மக்களிடம் அதனைக் கொண்டு செல்லும் போது ஒவ்வொரு சமூகமும் "முதிர்ச்சி" அடைகிறது. மற்றவர்களுடன் நாம் தொடர்பு கொள்ளும் முறையிலும் தர்மத்தை போதித்து வாழ்வதிலும்,

நம்மோடு இருப்பவர்களிடமும் சந்திப்பவர்களிடமும் அதற்கு சாட்சியம் பகர்வதைக் கொண்டுதான் நமது விசுவாசத்தின் வலிமையை தனிப்பட்ட நிலையிலும் சமூக நிலையிலும் அளவிட முடியும் (திருத்தந்தை பிரான்சிஸ், 2013 உலக மறைப்பரப்பு ஞாயிறு செய்தி).

பொதுவான கருப்பொருள், ஆண்டின் நான்கு மாதங்களுக்கு சீடத்துவத்தின் ஒவ்வொரு கோணத்தையும் ஆராயும். அழைத்தல் (ஜனவரி – ஏப்ரல்), தேர்வு செய்தல் (மே – ஆகஸ்ட்டு), அனுப்பப்படுதல் ( செப்டம்பர் – டிசம்பர்). நமது சமூகங்கள் இன்னும் ஆழமாக ஆராய்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் ஒவ்வொரு மாதமும் சீடத்துவத்தின் கோணங்கள் மேலும் பல பிரிவுகளாக பிரிக்கப்படும்.

சீடத்துவத்திலிருந்து அப்போஸ்தலத்துவத்திற்கான பயணத்தின் ஓர் அம்சத்தை, சீடத்துவத்தின் ஒவ்வொரு கோணத்திலும் ஆராயப்படும். அழைத்தல் பகுதியில், சீடத்துவத்திற்கான பயணத்திற்கு நம்மை அழைத்த கடவுளின் எண்ணம் ஆராயப்படும். கடவுளின் அழைப்புக்கு நாம் தகுதியற்றவர்கள், கடவுளின் தாராள மனம் கொண்ட கடவுளின் அன்பின் காரணமாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். தேர்வு செய்தல் நிலையில், பலர் அழைக்கப்பட்டாலும் சிலரே தேர்வு செய்யப்பட்டனர் என்பதால், அவரோடு பயணம் செய்து, அறிந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அனுப்புதல் நிலையில், தூதுரைப் பணிக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற ஒரே கர்ரணத்திற்காக நாம் அழைக்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்டிருக்கிறோம் என்பதை ஆராய்வோம்.

இயேசுவோடு உள்ள நமது நெருக்கத்தின் காரணமாக இந்த பணி நம்மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கடவுளின் அழைப்புக்கு நாம் காட்டும் அன்பு மறுமொழியே தூதுரைப்பணி என்பதால் அது ஒரு சாதாரண பணியாக எண்ணலாகாது. சுருங்கக்கூறின், கடவுளின் மகிமைக்காக, இயேசுவோடு இருப்பதால் அனைத்து நடவடிக்கைகளும் இயல்பாக நடக்கின்றன.

PMPT Core Team
1 நவம்பர் 2013